பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்

0776906182


# தினப்புயல்

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06


கலையரசி நகைமாடம்


T.P- 0770457661

மலர்-02 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் - 23

## பரீட்சையும், மாணவர்களும்

இலங்கையின் கல்வித்திட்டத்தின் அடிப்படையில் ஒரு மாணவனின் புலமை பெற்றவர் என்பதை நிரூபிக்கும் பரீட்சைகள் மூன்று நிலைகள் உள்ளன. தரம் ஐந்தில் நடைபெறும் புலமைப் பரீட்சை (Scholarships), பதினொராம் தரத்தில் நிகழும் சாதாரண தர பரீட்சை (ordenry level), பதின் மூன்றாவது தரத்தில் நிகழும் உயர்தர பரீட்சை (advance level).

இம்மூன்று பரீட்சைகளும் ஒரு மாணவனின் கல்வித் தகைமையை வைத்து புலமைகள் தீர்மாணிக்கப்படுகின்றன. அதையும் தாண்டி இம்மூன்று பரீட்சையில் சித்தியடையாத பல பேர் பல துறைகளில் சாதனை படைத்த வர்களும் இலங்கையில் இருக்கின்றார்கள் என்பதையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும். (03)




## ஜேர்மனி: யார் அடுத்த சான்சிலர்...?



மெர்க்கலின் CDU + CSU பழமைவாதக் கூட்டணிக்கு 24.2% வாக்குகள் கிடைத்து 195 இடங்களை கைப்பற்றிய நிலையில். மத்திய-இடது சமூக ஜனநாயகவாதிகள் கட்சி (SPD) 26.0% வாக்குகளைப் பெற்று 210 இடங்களில் வெற்றி பெற்றுள்ளனர்.

ஜேர்மனியில் ஞாயிற்றுக்கிழமை (26.09.2021) அன்று நடைபெற்ற பொதுத்தேர்தலில் சமூக ஜனநாயகக் கட்சியினர் வெற்றியைப் பெற்றனர். 2005 முதல் ஏஞ்சலா மெர்க்கலின் கீழ் 16 வருடங்கள் ஆட்சி செய்துவந்த பழமைவாத கிறிஸ்தவ ஜனநாயக கட்சியின் (CDU) ஆட்சி இத்துடன் முடிவுக்கு வருகிறது. (03)

## ஆறு பெருக்கெடுப்பதனால் லெட்சுமி தோட்ட மக்கள் பாதிப்பு



மலையகத்தில் தொடர்ந்து மழை பெய்து வருகின்றமையினால் பொது மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்துள்ளதுடன் ஆங்காங்கே மண்சரிவுகள் ஏற்படுவதுடன் மின்சார விநியோகமும் தடைப்பட்டுள்ளது.

ஹட்டன் கொழும்பு பிரதான வீதியில் ஸ்ரதன் பகுதியில் மண்மேட்டுடன் மரமொன்று சரிந்து வீழ்ந்தமையினால் குறித்த வீதி பல மணி நேரம் போக்குவரத்து தடைப்பட்டதுடன் வீதி அபிவிருத்தி அதிகார சபை ஊழியர்களினால் மண்திட்டு அகற்றப்பட்டு போக்குவரத்து வழமைக்கு திரும்பியதாக ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

ஆங்காங்கே மண்சரிவுகள் ஏற்பட்டுள்ளமையினால் வாகன சாரதிகள் அவதானத்துடன் வாகனங்களை செலுத்துமாறு பொலிஸார் வேண்டுகோள் விடுக்கின்றனர். (03)

## விரைவாக தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தல்

தடுப்பூசி ஏற்றலுக்கு எதிராக ஒரு சிலர் வர்த்தக நோக்கங்களுக் காக பரப்பி வரும் மூட நம்பிக்கைகளுக்கு ஏமாறாமல் சந்தர்ப்பம் கிடைக்கும் போது இன்னும் தடுப்பூசி பெற்றுக்கொள்ளாத இளைஞர்கள் முதலாம் கட்ட கொவிட் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளுமாறு கொழும்புப் பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் சமுதாய மருத்துவ விஞ்ஞானம் தொடர்பான பேராசிரியர் திரு.மஞ்சு வீரசிங்க வேண்டிக்கொள்கின்றார்.

தடுப்பூசி ஏற்றுவதால் பாலியல் பலவீனம் மற்றும் மலட்டுத்தன்மை ஏற்படுவதாக ஒருசிலர் கூறும் கருத்துக்களுக்கு எந்தவொரு விஞ்ஞான ரீதியான அடிப்படையும் இல்லையெனச் சுட்டிக்காட்டும் பேராசிரியர், விஞ்ஞான ரீதியாக உறுதிப்படுத்தப்படாத அவ்வாறான தவறான கதைகளுக்கு ஏமாறாமல் புத்திசாதுரியமாக நடந்து கொள்வதன் மூலம் நபர்களையும் அதேபோல் நாட்டையும் பாதுகாக்க முடியும் என்பதையும் தெரிவிக்கின்றார். (02)



தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல : 154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## தொடரும் சீரற்ற காலநிலை - மக்களே அவதானம்

நாட்டில் மழை பெய்ய ஆரம்பித்திருக்கிறது. மாலை. இரவு வேளைகளில் இடி மற்றும் மின்னல் தாக்கத்துடன் நாட்டின் பல பகுதிகளிலும் மழை பெய்கிறது. தொடர்ச்சியாக வளிமண்டலவியல் திணைக்களம் மக்களை அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தி வருகின்றது.

மழையால் ஆறுகள் பெருக்கெடுக்கும் அபாய நிலையும் மலையகப் பகுதிகளில் உருவாகியுள்ளது. காலி. மாத்தறை. நுவரெலியா. கேகாலை. இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு மண்சரிவு தொடர்பான சிவப்பு எச்சரிக்கை அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

மலையகத்தின் பல இடங்களில் மின் கம்பங்கள் சேதடைந்திருப்பதாகவும். வீதிகளில் மண்மேடுகள் சரிந்து விழுந்துள்ளதாகவும் அறியக்கிடைத்திருக்கிறது. வாகன சாரதிகள் அங்கு அவதானமாக பயணிக்குமாறு பொலிசார் கோரிக்கை விடுத்துள்ளனர். மின்சாரம் பல இடங்களில் துண்டிக்கப்படும் நிலை தோன்றியுள்ளது. இந்த சீரற்ற காலநிலை இனிவரும் காலங்களில் தொடரப் போகின்றது.

அத்துடன் இன்றைய தினமும் மேல். சப்ரகமுவ. மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் இடைக்கிடையே மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சப்ரகமுவ மாகாணத்திலும் கண்டி. நுவரெலியா. களுத்துறை. காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 50 மில்லி மீற்றருக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களில் சில இடங்களில் மாலையில் அல்லது இரவு வேளையில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். நாட்டினுடைய கடல் பகுதிகளில் காற்றின் வேகமும் அதிகரித்திருக்கிறது.

எனவே மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொது மக்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

## 5 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை




நாட்டின் 5 மாவட்டங்களுக்கு மண்சரிவு தொடர்பான சிவப்பு எச்சரிக்கை அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

காலி. மாத்தறை. நுவரெலியா. கேகாலை. இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு இந்த எச்சரிக்கை அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

காலி மாவட்டத்தின் எம்பிலிப்பிட்டிய. நெலுவ பகுதிகளுக்கும் மாத்தறை மாவட்டத்தின் அக்குரஸ்ஸ. கொடபல பகுதிகளுக்கும் கேகாலை மாவட்டத்தில் ருவான்வெல்ல மற்றும் எட்டியாந்தோட்டை பிரதேசங்களுக்கும் நுவரெலியா மாவ ட்டத்தில் அம்பகமுவ காரேலே. இரத்தினபுரி மாவட்டத்தின் குருவிட்ட. களவான எஹலியகொட. இரத்தினபுரி நிவித்திகல ஆகிய பகுதிகளுக்கும் மண்சரிவு எச்சரிக்கை அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. (அரசாங்க தகவல் திணைக்களம்)

## கடலில் கரையொதுங்கிய பாரிய இயந்திரம்



*கற்பிட்டி நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் கடலில் நடுப்பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலக்கரி ஏற்றியிறக்கும் பாரிய இயந்திரம் நுரைச்சோலை இளந்தையடி பகுதியில் (26) அன்று கரையொதுங்கியுள்ளது.*

*புத்தளத்தில் கடும் காற்று வீசியது. இந்த நிலையில் நுரைச்சோலை அனல்மின் நிலையத்தின் கடலில் நடுப்பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலக்கரி ஏற்றியிறக்கும் சுமார் 120 அடி நீளம் கொண்ட பாரிய இயந்திரம் கரையொதுங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.*

*இவ்வாறு கரையொதுங்கிய நிலக்கரி ஏற்றியிறக்கும் பாரிய இயந்திரத்தை மீண்டும் நடுக்கடலுக்கு கொண்டு செல்லுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் அதிகாரியொருவர் குறிப்பிட்டார்.*

**நாட்டில் மேலும் 51 கொவிட் மரணங்கள் நேற்று (27.09.2021) பதிவாகியுள்ளன. இதற்கமைய நாட்டில் பதிவாகியுள்ள கொவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 12,731 ஆக அதிகரித்துள்ளது. அத்துடன் நேற்று 983 பேருக்கு கொவிட் தொற்று உறுதியாகியுள்ளது. இதற்கமைய இதுவரை அடையாளம் காணப்பட்ட கொவிட் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 514,592 ஆக அதிகரித்துள்ளது.**

## விரைவாக தடுப்பூசிகளைப்...

கொவிட் தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டத்தை சீர்குலைக்கும் நோக்குடன் பல்வேறு தளங்கள் மூலமாக பரப்பப்பட்டு வரும் தவறான கருத்துக்களை விஞ்ஞான ரீதியாக பரிசீலனை செய்வதற்கு அரசாங்க தகவல் திணைக்களத்தால் ஒழுங்குபடுத்தப்பட்ட ஊடகக் கலந்துரையாடலில் பேராசிரியர் இதனைக் குறிப்பிட்டுக் கூறினார். நேற்றைய (27) கலந்துரையாடல் அரசாங்க தகவல் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் தடுப்பூசி பெற்றுக் கொள்வதால் கொவிட் 19 உயிரிழப்பு வீதத்தைக் குறைத்துக் கொள்ள முடிந்துள்ளது. அதனால் இளைஞர்களுடைய உயிர்களைப் பாதுகாப்பதற்கும் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டத்தை சீர்குலைக்க வேண்டாம் எனவும். மருத்துவ முறைகளைப் பரப்புகின்ற போர்வையில் தவறான கருத்துக்களைப் பரப்புவர்களிடம் திரு.வீரசிங்க வேண்டுகோள் விடுத்தார்.

கடந்த 26ஆம் திகதி வரைக்கும் 12 மில்லியன் பேருக்கு கொவிட் 19 தடுப்பூசி இரண்டு கட்டங்களும் வழங்கப்பட்டுள்ளதுடன். மேலும் முதலாம் கட்ட தடுப்பூசி வழங்கப்பட்டவர்களில் 2.2 மில்லியன் பேருக்கு மாத்திரமே இரண்டாம் கட்ட தடுப்பூசி வழங்க வேண்டியும் உள்ளது. இலங்கையில் மட்டுமன்றி முழு உலகிலுமே கொவிட் 19 கட்டுப்பாட்டுக்குள்ள சிறந்த தீர்வு தடுப்பூசியாகும். பேராசிரியர் சுட்டிக்காட்டிய வகையில். தொற்று நோய்களுக்கு எதிராக தடுப்பூசி தொடர்பான சட்டம் முதன்முதலாக 1853 ஆம் ஆண்டு பிரித்தானிய பாராளுமன்றத்தால் கொண்டு வரப்பட்டது. அது சின்னமுத்து நோய்க்கானதாகும். மேலும் 170 வருடகாலமாக தடுப்பூசி ஏற்றலுக்கு எதிரான தரப்பினர்கள் ஒரே விதமான தர்க்கங்களையே முன்வைக்கின்றனர். குறித்த தடுப்பூசியால் பயனில்லை எனவும். ஆரோக்கியத்திற்கு கேடு விளைவிக்கும் பதார்த்தங்கள் இருக்கலாம் எனவும் மற்றும் மேற்கத்தேய மருத்துவ விஞ்ஞானத்தின் ஏகபோகவாதத்தை நாடு ஏற்றுக் கொள்ளக் கூடாது போன்ற கருத்துக்கள் அவற்றில் சிலவாகும்.

1885 ஆம் ஆண்டில் நீர்வெறுப்பு நோய்க்கும். 1920 ஆம் ஆண்டில் தொண்டை அழற்சி நோய்க்கும் தடுப்பூசி அறிமுகப்படுத்தப்பட்டதுடன். மேலும் 1949-1955 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பல்வேறு தடுப்பூசிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. தடுப்பூசி வழங்குவதால் பல்வேறு நோய்களை குறைந்த மட்டத்திற்குக் கொண்டு வருவதற்கு முடிந்தமையால் தொற்று நோய்களுக்கு முக்கிய சிகிச்சையாகவும். தீர்மானம் மிக்க காரணியாகவும் காணப்படுவது தடுப்பூசியே என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கொரோனா தொற்றாளர்களின் உயிரிழப்பு வீதம் மற்றும் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைவடைவதற்கும் தடுப்பூசி ஏதுவாக அமைந்தமையை கலந்துரையாடலில் கலந்துகொண்ட ஹோமாகம மூன்றாம் நிலை கொவிட் 19 சிகிச்சை மருத்துவமனையின் விசேட மருத்துவ நிபுணர் எரங்க நாரங்கொட குறிப்பிட்டுக் கூறினார்.

இரண்டு கட்ட தடுப்பூசிகளையும் பெற்றுக்கொண்டு. ஒருமாத காலத்தின் பின்னரே நோய் எதிர்ப்புச்சக்தி முழுமையாக ஏற்படுமெனவும் கூறினார். குறித்த காலத்தை பூர்த்தி செய்யாவிட்டால் தடுப்பூசி பெற்றுக்கொண்டாலும். சிகிச்சை பலனளிக்காமல் மோசமான நிலைமைக்கோ அல்லது உயிரிழப்போ ஏற்படுவதற்கு வாய்ப்புண்டு. தடுப்பூசி வகைகளுக்கு ஏற்ப அதிக நோய் எதிர்ப்புக் கிடைப்பதாக. பொதுமக்கள் மத்தியில் காணப்படும் எண்ணங்கள் பொய்யானவை எனவும். உலக சுகாதார தாபனம் அங்கீகரித்துள்ள 08 தடுப்பூசி வகைகளும் ஒரே சமமான நோய் எதிர்ப்புச் சக்தியை வழங்குவதாகவும் மருத்துவர் அவர்கள் தெளிவுபடுத்திக் கூறினார். பைசர் தடுப்பூசி 12 வயது தொடக்கம் 18 வயது வரையான பிள்ளைகளுக்கு மாத்திரமே அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் எந்தவொரு தடுப்பூசியின் மூலமும் ஒரே சமமான நோய் எதிர்ப்பு சக்தியே கிடைக்கின்றது.

இலங்கை தெற்காசிய நாடுகளில் சிசு மரணம் குறைவான நாடாக காணப்படுவதற்கான காரணமாக அமைவது. குறிப்பிட்ட காலங்களில் பிள்ளைகளுக்கு தடுப்பூசி வழங்குவதாலேயாகும் என குடும்ப சுகாதாரப் பணியகத்தின் பணிப்பாளர். சமுதாய மருத்து விசேட நிபுணர் திருமதி. சித்ரமாலி டி சில்வா குறிப்பிட்டுக் கூறினார். 1961 ஆம் ஆண்டில் பிள்ளைகளுக்கு தடுப்பூசி வழங்கும் செயற்திட்டம் ஆரம்பித்தாலும். நாடுபூராகவும் 1978 ஆம் ஆண்டிலேயே மேற்கொள்ளப்பட்டது. பிள்ளைகளுக்குக் காலத்திற்குக் காலம் நோய்த்தொற்று ஏற்படுவதற்குள்ள சந்தர்ப்பங்களை ஆராய்ந்து அவற்றுக்குக் குறித்த காலத்தில் தடுப்பூசி வழங்குகின்றமையால். சிசு மரணத்தைக் குறைத்துக் கொள்வதற்கு இயலுமை கிட்டியுள்ளமையாலும். கொவிட் 19 தடுப்பூசி 12 வயதுக்குக் குறைவான பிள்ளைகளுக்கு வழங்குவதற்கு உலக சுகாதார தாபனம் அங்கீகரிக்கவில்லை எனவும் விசேட நிபுணத்துவ மருத்துவர் சுட்டிக்காட்டினார்.

## கலகொட அத்தே ஞான...

**கேள்வி :** பாராளுமன்றில் முஸ்லீம் தரப்பு குரல் கொடுக்காதபோது, தற்போது தமிழினத்திற்கு எதிரான இனப்படுகொலை தொடர்பில் ஜெனிவாவில் பிரேரணைகள் முன்வைக்கப்பட்டது. ஆதாரங்கள் திரட்டப்பட்டு வருகின்றது. இவ்வாறான நிலையில் இது தொடர்பாக பாராளுமன்றத்தில் உரையாற்றாது, முஸ்லீம்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் குறித்து பாராளுமன்றில் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் பேசியதை நீங்கள் எப்படி பார்க்கின்றீர்கள்?

**பதில் :** பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் தனிப்பட்ட ரீதியாக அவர் முஸ்லீம்களுக்கு ஆதரவாக குரல்கொடுத்ததை நான் வரவேற்கின்றேன். தமிழர்களின் பிரச்சினைகள் பற்றியும் அவர் பேசியிருக்கவேண்டும். ஆனால் சந்தர்ப்பம் சுழல் அவருக்கு இடம்கொடுக்கவில்லை என்றும் கூறலாம். அதற்காக குரல்கொடுக்கக்கூடாது என நான் கூறவில்லை. முஸ்லீம் தரப்பு ஞானசாரருக்கு எதிராக என்ன செய்யப்போகின்றார்கள் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். அரசாங்கம் சிறுபான்மை இனங்களை அடக்கியாளவேண்டுமென்று ஞானசாரர் போன்ற இனவாதிகள் துடிக்கிறார்கள். இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். சாணக்கியன் முஸ்ஸீம்களுக்கு ஆதரவாகப் பேசிவிட்டார்கள் என்பதற்காக அரசு உடனடியாகத் தீர்வுகளை வழங்காது. முஸ்லீம்களின் பிரச்சினை வேறு. வடகிழக்குத் தமிழ் மக்களின் பிரச்சினை வேறு. மலையகத்தில் வாழும் தமிழ் மக்களின் பிரச்சினை என்பது வேறு. 30 ஆண்டு காலப் போராட்டம் அதற்கு முன் தந்தை செல்வாவின் அஹிம்சைப் போராட்டம் என்று தமிழினத்தின் இன விடுதலைக்கான போராட்டத்திற்கு என்று ஒரு வரலாறு உண்டு. அதனை நாம் எளிதில் மறந்துவிட முடியாது. ஒருவேளை சாணக்கியனுக்கு தமிழ் மக்களது வரலாறு தெரியாமல் இருக்கலாம். யுத்தம் இடம்பெறுகின்ற போதும் அதற்குப் பின்னரும் வடகிழக்கு மலையகத் தமிழர்களுக்காக குரல் எழுப்பியவன் நான். அதனை அடிப்படையாகக் கொண்டு பாராளுமன்றத்தில் எமது பேச்சுக்கள் அமையப்பெற்றால் அது சிறந்தது. நாம் எவருக்கும் வக்காளத்து வாங்கவேண்டிய தேவை இல்லை.

**(நேர்காணல் – இரணியன்)** **(தொடரும்...)**

## சி.வி.கே.சிவஞானம் அவர்களின் நேர்காணல்...

கேள்வி : அங்கீகரிக்க வேண்டும் என்று ஏன் தமிழ் கட்சிகள் குரல் கொடுக்கக்கூடாது?

பதில் : என்ன இருந்தாலும் எங்களை பொறுத்தவரையில் அடிப்படையிலே தமிழ் தேசியம் சார்ந்த அனைத்து கட்சிகளும் வடக்கு கிழக்கு இணைப்பைத்தான் வலியுறுத்தி வருகின்றனர். இதில் எந்த மாற்றுக்கருத்துமில்லை. வடக்கு கிழக்கு இணைந்த தாயகம் வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. அனைவரும் ஒரே கருத்தில் தான் இருக்கின்றார்கள்.

கேள்வி : இன்று ஜெனீவா பிரச்சினையிலே மிச்சல் பச்சலெட் அம்மையார் கூறிய விடயங்களுக்கு முன்பதாக, தமிழரசுக் கட்சி அல்லது தமிழ் தேசிய கூட்டமைப்பு எனும் ஒன்றிணைவிலே ரெலோ, புளொட் போன்ற இரண்டு கட்சிகளும் ஆயுதம் தாங்கிய கட்சிகளாக இருக்கின்றன. விடுதலைப்புலிகளையும் போர்க்குற்றம் தொடர்பாக விசாரிக்கவேண்டும் என்று கூறுவதை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்?

பதில் : இதில் பல கருத்துக்களில் நான் முரண்படுகின்றவன். ஆரம்பகாலத்தில் இருந்து நான் இந்த இயக்கங்களுடைய உருவாக்கம் வளர்ச்சி அழிப்பு அனைத்தையும் பார்த்தேன். சரியோ பிழையோ நான் பல மாற்று இயக்கங்களால் பாதிக்கப்படுகின்றேன். இருந்தாலும் அநேகமாக அவர்கள் அனைவருமே தாங்கள் ஏதோ தமிழ் மக்களுடைய விடுதலை நோக்கில்தான் செயற்படுகின்றோம் என்றவொரு எண்ணப்பாட்டில் தான் இருந்தார்கள். அதை கொச்சப்படுத்த நான் விரும்பவில்லை. ஆனால் அவர்களுடைய அணுகுமுறைகள் தான் வித்தியாசமானவை. உள்ளுக்கு மக்கள் நலன் சார்ந்த சிலசில பாதிப்பு ஏற்படக்கூடிய விடயங்களை செய்தார்கள் என்பது உண்மை. ஆனால் அவர்களுடைய எண்ணத்திலே அரசாங்கத்தை எதிர்த்து எங்களை அடிமைப்படுத்துகின்றார்கள் என்பதை உடைத்தெறிய வேண்டும் என்பதில் அனைவருக்கும் ஒரு பொதுவான எண்ணப்பாடு இருந்தது. எனவே அவர்கள் அதை நோக்கித்தான் போராடினார்கள் அல்லது போராட்டத்திற்கு வந்தார்கள். வந்ததன் பின்னர் அவர்களுடைய அணுகுமுறைகளால் தான் அவர்கள் ஒவ்வொரு கட்சிகளிலும் இருந்து விலகி சென்றார்கள். அனைவருமே விடுதலையை நோக்கியவர்கள் தான். ஆகவே என்னுடைய பார்வையிலே எந்த இயக்கத்திற்காகவும் எதிராக விசாரணைகள் செய்ய வேண்டும் என்று நாங்கள் கேட்கவேண்டிய தேவையில்லை. (தொடரும்...)

## பரீட்சையும், மாணவர்களும்...

புலமைப் பரீட்சை பெற்றோர்களின் பரீட்சை எனவும், சாதாரண பரீட்சை ஆசிரியர்களின் பரீட்சை எனவும், உயர்தரம் மாணவர்களின் பரீட்சை எனவும் கூறப்படுகின்றது. இவ்வாறு கூறப்பட்டாலும் முழுப் பரீட்சைகளும் மாணவர்களின் பரீட்சை என்பது குறிப்பிடத்தக்கது. ஏனென்றால் ஒரு மாணவனின் முயற்சிதான் எல்லா பரீட்சைகளின் வெற்றியில் தங்கியுள்ளது. உயர்தரப் பரீட்சைக்கு தகுதி என்பது இரு பிரிவிகளில் தங்கியுள்ளது. சாதாரண தரத்தில் ஒன்பது பாடங்களிலும் சித்தி பெற்றவர்கள் உயர்தரத்தை பாடசாலையில் கற்கலாம். ஒன்பது பாடங்களிலும் ஆறு முக்கிய பாடங்களில் அதிலும் முக்கியமான பாடங்களான, கணி தம், தமிழ் இரண்டு பாடங்களிலும் ஏதேனும் ஒரு பாடத்திலும் எந்தவித பெறுபேறுகள் பெறா தவர்கள் அடுத்த முறை சாதாரண மாணவர்களுடன் இணைந்து அப்பாடத்தை படித்து பரீட்சை எழுதி சித்தியடையவேண்டும்.

இவ்வாறானவர்களுக்கு பாடசாலையில் உயர்தரம் படிக்கக் கூடிய வாய்ப்பு கிடைக்கி ன்றது. மேலும் உயர்தரத்திற்கு தகுதி பெற்றும் பாடசாலை தவிர்ந்த வேறு இடங்களுக்கு சென்று படித்து பரீட்சை ஆக எழுதுபவர்களும் உள்ளனர். உயர்தரம்

## யார் அடுத்த சான்சிலர்...?

எந்தக்கட்சியும் அறுதிப்பெரும்பான்மை பெறாதபடியால் ஆட்சி அமைப்பதில் சிக்கல் தோன்றியுள்ளது. மேலும், பசுமை அரசியல் கட்சிகள் என்று சொல்லக் கூடிய Alliance 90/The Greens கூட்டணி கட்சிகள் *112* இடங்கள், FDP *93* இடங்கள், AFD *86* இடங்கள், The Left கட்சி *40* இடங்கள் மற்றும் இதர காட்சிகள் *1* இடத்தையம் கைப்பற்றின. மொத்தம் *736* இருக்கைகள் (M.P) கொண்ட பாராளுமன்றத்தில் *369* இருக்கைகளை ஒரு கட்சி பெற்றால் தான் பெரும்பான்மையைக் கொண்டிருக்கும். ஆனால் எந்தக்கட்சியும் இந்த *369* எண்ணிக்கையைப் பெறவில்லை. SPD கட்சி கடந்த *2017* பொதுத்தேர்தலில் போது, *20.5%* வாக்குகளை மட்டுமே பெற்ற நிலையில், தற்போது கூடுதல் *26.0%* வாக்குகளை பெற்று வெற்றிபெற்றுள்ளது. தற்போது ஏதேனும் ஒரு கட்சி பெரும்பான்மையை பெற்று ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக மற்ற கட்சிகளுடன் கூட்டணியை அமைக்கவேண்டும். ஒரு மாத காலத்துக்குள் கூட்டணிகள் முடிவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில், Olaf Scholz ஜேர்மனியின் அடுத்த சான்செலராக பதவியேற்கவுள்ளார் என எதிர்பார்க்கப்படுகிறது. அப்படியானால், SPD கட்சி சார்பாக பதவி ஏற்கப்படும் நான்காவது சான்செலராக Scholz இருப்பார். ஆனால் எந்தக்கட்சியும் *26* வீத வாக்குகளுக்கு மேல் பெறாத காரணத்தால், ஆட்சி அமைப்பதில் இழுபறிநிலை தோன்றியிருப்பதுடன் ஜேர்மனியின் அதிகாரம் மிக்க பதவியான சான்சிலர் பதவி தெரிவிலும் உடனடியாகத் தீர்மானிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

**மூன்று நிலைகள்...**

ஜேர்மனியில் முன்னர் ஆட்சிசெய்த கட்சிகளான CDU கட்சியும் SPD கட்சியும் ஒன்று சேர்ந்து ஆட்சியமைக்கலாம்.

அல்லது CDU கட்சியுடன் ஏனைய சிறிய இரண்டு கட்சிகள் சேர்ந்து ஆட்சி அமைக்கலாம்.

அல்லது SPD கட்சியுடன் ஏனைய சிறிய இரண்டு கட்சிகள் சேர்ந்து ஆட்சி அமைக்கலாம்.

இவற்றில் எது சாத்தியப்படும் என உடனடியாகக் கூறமுடியாது. இனி ஒவ்வொரு கட்சிகளும் எனைய கட்சிகளுடன் பேரம்பேசுதல் ஒப்பந்தம் செய்தல் பேச்சுவார்த்தை செய்தல்கள் மூலமே இறுதி முடிவு எட்டப்படும். எப்படியும் இன்னும் ஒரு மாதத்திற்குள் முடிவுகள் எட்டப்படும். சிலநாட்களின் பின் முடிவுகள் கிடைத்துவிடும். அதுவரை பொறுத்திருந்து பார்ப்போம்.

**(ஆசிரியர் – "மண்" சஞ்சிகை – ஜேர்மனி)**

## ஆறு பெருக்கெடுப்பதனால்...

**மேலும் நோட்டன் காசல்ரீ கடை வீதிப் பகுதியில் மூங்கில் மரமொன்று மின் கம்பத்தின் மீது வீழ்ந்தமையினால் 16/09 இரவு முதல் குறித்த பகுதியில் மின் விநியோகம் தடைப்படிருந்த நிலையில் நோட்டன் பிரிட்ஜ் மின்சார சபை ஊழியர்கள் திருத்தப்பணிகளில் ஈடுபட்டுள்ளனர். இதே வேளை பொகவந்தலாவை லெட்சுமி மத்திய பிரிவில் கிளை ஆறு பெருக்கெடுத்தமையால் தொழிலாளர்கள் மழை காலங்களில் பெரும் அசௌக ரியங்களுக்கு உள்ளாவதாக தெரிவிக்கின்றனர். மழை காலங்களில் காசல்ரீ நீர்தேக்கத்தோடு இணையும் பொகவந்தலாவ லெச்சுமி தோட்டம் மத்திய பிரிவில் பிரதான வீதியை ஊடறுத்து செல்லும் கிளை ஆறு நிரம்பி பெருக்கெடுக்கின்றமையினால் பிரதான பாதையில் மூன்று அடி உயரம் நீர் நிரம்புவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். இதனால் குறித்த வீதியில் பயணிப்பவர்கள் பெரும் அசௌகரியத்திற்கு உள்ளாவதுடன் கொழுந்து மூடைகளை தலையில் சுமந்து கொண்டு பெண் தொழிலாளர்கள் நடந்து செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. குறித்த ஆற்றினை அகலப்படுத்த தோட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென லெட்சுமி தோட்ட மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (– நோட்டன் பிரிட்ஜ் நிருபர் – )**

மாணவர்களின் பரீட்சை என அழைக்கப்படுகின்றது. காரணம் என்னவென்றால் ஒரு மாணவனின் வாழ்க்கையை தன் னைத் தானே சிந்தித்து துணிவுடன் அவனுடைய ஆசை, திறமை என்பவற்றை பயன்படு த்தி அவன் தனக்கு தேவையான ஆசையான பிரிவைத்தெரிவு செய்கின்றான். இதற்கு விடா முயற்சி என்பது ஆசிரியரோ பெற்றோரோ அல்ல. மாறாக மாணவர்கள் மட்டுமே. இப்பரீட்சை மூன்று தடவை எழுதலாம். அதற்கு மேலும் எழுத முடியும். மூன்று தடவை எழுதினால் மட்டுமே இலங்கையின் தேசிய பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற முடியும். மூன்று தடவைகளுக்கு மேல் எழுதினால் அரச பல்கலைக்கழகம் தவிர்ந்த பல்கலைக்கழகம் செல்ல முடியும். குறிப்பாக உயர்தரத்தில் கல்வி கற்பதை தெரிவு செய்யும் உரிமை மாணவர்களில் மட்டுமே தங்கியுள்ளது.

ஆசிரியர், தாய் தந்தையின் கையில் தங்கியிருக்கவில்லை. மாறாக ஒரு மாணவருக்கு இந்த துறையை கற்கவேண்டாம் என்று கூறுவதற்கும் அவர்களுக்கு உரிமை இல்லை. எனி னும் ஆலோசனைகளை வழங்க முடியும். மாணவர்கள் ஒன்றை நன்றாக புரிந்து கொள்ள வேண்டும். தனது இலக்கை அடைய துணிந்து நிற்க வேண்டும். ஒரு தடவையோ, இரு தடவையோ தோல்வி அடைந்தாலும் நான் மூன்றாவது தடவை வெற்றி பெறுவேன் என்ற தன்னம்பிக்கை இருக்க வேண்டும். இதில் முக்கியமான ஒரு விடயம், ஒரு துறையை தெரிவு செய்துவிட்டு அந்தத்துறை கடினமாக இருந்தால் வேறு துறையில் படிக்கவும் முடியும். நீங்கள் ஒரு தடவை எதேனும் காரணங்களினால் படிக்கவில்லை என்றால் அடுத்த முறை எழுதமுடியும்.

இரண்டு தடவைகள் அனைத்து பாடங்களிலும் தோல்வி அடைந்து விட்டு மூன்றாவது முறை மூன்று "ஏ " சித்திகளைப் பெற்று வைத்தியர்களாக உருவாகிய வைத்தியர்களும் இந்நாட்டில் உண்டு. ஒரு மாணவன் உயர்தரம் படிக்கும் போது பல சவால்களை எதிர்கொள்வார்கள். குடும்பத்தினர்கள், ஆசிரியர்கள் மற்றும் நண்பர்கள் பலர் "நீ எங்க engineer, doctor , lawyer, teacher ஆகப்போர" என கூறுவார்கள். இதையெல்லாம் கண்டுகொள்ளாதீர்கள். தான் செய்து காட்டுவேன் என்ற ஊக்கத்துடன் படியுங்கள். பகுதி நேர வகுப்பிற்கு சென்று தான் படிக்க வேண்டும் என்பதில்லை. படிக்கும் மாணவர்கள் இருக்கும் இடத்தில் இருந்தே படித்து தனது இலக்கை அடைவார்கள். தன்னம்பிக்கையுடன் முயற்சி செய்து இலக்கை அடைவதற்கான முயற்சிகளை செய்யும் போது நிச்சயமாக நீங்கள் வெற்றி பெறுவீர்கள். - **பைசல் இஸ்மாயில்**

## தலிபான்கள் சர்வதேச விமானங்களுக்கு அழைப்பு




காபூல் விமான நிலையத்தில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறுகள் சரி செய்யப்பட்டு சர்வதேச மற்றும் அனைத்து உள்நாட்டு விமான சேவைகளுக்கும் விமான நிலையம் தயாராக இருப்பதாக தலிபான் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்க ராணுவம் வெளியேறத் துவங்கியதும் கடந்த ஒகஸ்ட் 15ம் திகதி ஆப்கானை தலிபான்கள் கைப்பற்றினர். காபூல் விமான நிலையத்தை மட்டும் தங்களது கட்டுப்பாட்டில் வைத்திருந்த அமெரிக்க ராணுவம், ஒக., 30ம் திகதி அங்கிருந்து வெளியேறியது. இதையடுத்து தலிபான்களின் கட்டுப்பாட்டிற்குள் காபூல் விமான நிலையம் வந்தது.

இந்நிலையில், தலிபான் வெளியுறவு அமைச்சகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில், 'தற்போது காபூல் விமான நிலையத்தில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறுகள் சரி செய்யப்பட்டுவிட்டன. சர்வதேச மற்றும் அனைத்து உள்நாட்டு விமான சேவைகளுக்கும் தயாராகவுள்ளது. முன்பு போல் அனைத்து விமானங்களையும் இயக்க விமான நிறுவனங்கள் முன்வரவேண்டும்' எனத் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

## கோப்பையைக் கைப்பற்றிய ஹர்காஸ்



மோசெல் ஓபன் டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் பைனலில் ஸ்பெயினின் பாப்லோ கேரனோ பஸ்டாவை வீழ்த்தி, போலந்து வீரர் ஹியூபர்ட் ஹர்காஸ் சாம்பியன் பட்டம் வென்றுள்ளார். பிரான்சின் மெட்ஸ் நகரில் நடந்த மோசெல் ஓபன் டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் பைனலில் ஹியூபர்ட் ஹர்காசும், கேரனோ பஸ்டாவும் மோதினர். ஹர்காசின் முதல் கேமை, கேரனோ பஸ்டா பிரேக் செய்து, முன்னிலையுடன் போட்டியை துவக்கினார். இருப்பினும் கேரனோ பஸ்டாவின் 8வது கேமை பதிலுக்கு ஹர்காஸ் பிரேக்செய்ய, இருவரும் சமநிலையை எட்டினர். இதனால் அந்த செட் டைபிரேக்கர் வரை நீடித்தது.

டைபிரேக்கரில் துல்லியமான சர்வீஸ்கள் மூலம் அந்த செட்டை ஹர்காஸ் கைப்பற்றினார். இரண்டாவது செட்டின் துவக்கில் இருவரும் மாறி, மாறி கேம்களை பிரேக் செய்தனர். இருப்பினும் அதிரடியாக சர்வீஸ்கள் மூலம் மீண்டும் ஆதிக்கம் செலுத்திய ஹர்காஸ், 2வது செட்டை எளிதாக கைப்பற்றினார். இதன் மூலம் 7-6, 6-3 என நேர் செட்களில் கேரனோ பஸ்டாவை வீழ்த்தி, மோசெல் ஓபன் ஆடவர் ஒற்றையர் கோப்பையை கைப்பற்றினார்.

### இரட்டையர் போட்டியிலும் வெற்றி

ஒற்றையர் பைனல் முடிந்த சில மணி நேரங்களிலேயே இரட்டையர் போட்டிக்கான பைனல் அதே கோர்ட்டில் நடந்தது. இதில் ஹர்காசும், சக நாட்டவரான ஜான் ஷீலின்ஸ்கியும் போலந்தின் ஹியூகோ நைஸ் மற்றும் பிரான்சின் ஆர்தர் ரிண்டர்க்நெச் ஜோடியுடன் மோதினர். முதல் செட்டை சற்றுப் போராடி 7-5 என கைப்பற்றிய ஹர்காஸ் ஜோடி, இரண்டாவது செட்டை எளிதாக 6-3 என கைப்பற்றியது. இந்த வெற்றியின் மூலம் மோசெல் ஓபன் ஆடவர் ஒற்றையர் கோப்பை மற்றும் இரட்டையர் கோப்பை என இரண்டையும் ஹர்காஸ் வென்று, சாதனை படைத்துள்ளார்.

## டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து திடீரென ஓய்வை அறிவித்த மொயீன் அலி

டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து இங்கிலாந்து சகலதுறை ஆட்டக்காரர் மொயீன் அலி உடனடியாக ஓய்வு அறிவிக்கவுள்ளார். 34 வயதாகும் மொயீன் அலி 64 டெஸ்ட் போட்டிகளில் ஆடியுள்ளார். டெஸ்ட் போட்டிகளில் இனி ஆடும் எண்ணமில்லை என்று தெரிவித்துள்ளார்.

வரும் மாதங்களில் வீட்டை விட்டு பிரிந்து நீண்ட காலம் வெளிநாட்டில் இருக்கவேண்டி வரும் என்று நினைக்கும் மொயீன் அலி அது இனிமேல் சாத்தியமில்லை என்று கருதுகிறார். டி20 உலகக்கோப்பையில் ஆடவேண்டும். பிறகு ஆஷஸ் தொடருக்கா கச் செல்லவேண்டும். இப்போது ஐபிஎல் தொடரில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்காக எமிரேட்சில் ஆடி வருகிறார் மொயீன் அலி. இந்நிலையில் இங்கிலாந்து பயிற்சியாளர் கிறிஸ் சில்வர் உட். கேப்டன் ஜோ ரூட் ஆகியோரிடம் தன் டெஸ்ட் ஓய்வு விடயத்தை தெரிவித்து விட்டதாகக் கூறப்படுகிறது. டெஸ்ட்டிலிருந்து ஓய்வு பெற்றாலும் குறைந்த ஓவர் கிரிக்கெட்டில் இங்கிலாந்துக்காக அவர் தொடர்ந்து ஆடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



– அப்துல் ஜெப்பார் அப்துல்லா –

## கூகுளுக்கு '23'

உலகையே தன்வசப்படுத்தி வைத்திருக்கும் கூகுள் நிறுவனம். தனது 23ஆவது பிறந்தநாளை நேற்று (செப்.27) கொண்டாடியது. கடந்த 1998ம் ஆண்டு செப்டம்பர் 27 ஆம் திகதி. அமெரிக்காவின் ஸ்டான்ஃபோர்ட் பல்கலைக்கழகத்தில் பயின்ற இரண்டு மாணவர்களால் தொடங்கப்பட்டதுதான் கூகுள் நிறுவனம். சாதாரணமாக தொடங்கப்பட்ட இந்நிறுவனம். தற்போது அசுரத்தனமாக வளர்ந்து 40 நாடுகளில் தங்களின் அலுவலகங்களை இயக்கி வருகிறது.

இந்நிலையில் நேற்று 23வது பிறந்தநாளை கொண்டாடிய கூகுள் நிறுவனம். சிறப்பு டூடுளை வடிவமைத்து வெளியிட்டுள்ளது. அதில். பழைய கணிப்பொறியில் கூகுள் பக்கம் திறக்கப்பட்டு. கூகுள் நிறுவனம் தொடங்கப்பட்ட திகதி குறிப்பிடப்பட்டுள்ளது.




## கனடா : இந்தியாவிற்கான தடை நீக்கம்

இந்தியாவிலிருந்து நேரடியாக கனடாவிற்கு விமானத்தில் செல்வதற்கான தடையை கனடா அரசு நீக்கியிருக்கிறது. கொரோனா பரவலை தடுக்க உலகின் பல்வேறு நாடுகளிலும் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக இந்தியாவிலிருந்து செல்லும் விமானங்களுக்கு தற்காலிக தடையை உலக நாடுகள் பலவும் விதித்துள்ளன.

இந்தியாவிலிருந்து நேரடி விமான சேவைக்கான தடையை கனடா செப். 26ஆம் திகதி வரை நீட்டித்திருந்தது. இந்நிலையில் கனடாவில் இந்திய விமானங்களுக்கான தடை அமுலில் இருந்த நிலையில், அதனை தற்போது நீக்கியிருக்கிறார்கள். நேற்று (செப்-27) முதல் விமான சேவை தொடங்கியிருக்கிறது. எனினும், கனடா செல்லும் பயணிகள் கண்டிப்பாக தடுப்பூசிகள் செலுத்தியிருக்க வேண்டும். 18 மணி நேரத்திற்கு முன் எடுக்கப்பட்ட கொரோனா நெகடிவ் சான்றிதழை வைத்திருக்கவேண்டும் என தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## சுவிஸ் : ஒரே பாலின திருமணத்திற்கு ஒப்புதல்



சுவிட்சர்லாந்தில் ஒரே பாலின ஜோடிகளுக்கு திருமணம் நடத்தப்படலாம் என்றும் அவர்கள் குழந்தையை தத்தெடுத்து வளர்க்கலாம் எனவும் நாடாளுமன்றத்தில் திருத்தசட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. இந்நிலையில் சுவிட்சர்லாந்தின் நேரடி ஜனநாயக அமைப்பின் படி இந்த விவகாரத்திற்கு பொது வாக்கெடுப்பின் மூலமே முடிவு காணவேண்டும் என்று Swiss People's Partyயைச் சேர்ந்தவர்கள் தொடர்ந்து நெருக்கடி கொடுத்து வந்தனர்.

இந்நிலையில் குறித்த விவகாரத்திற்கு கருத்துக் கணிப்பின் படி சுவிட்சர்லாந்தில் உள்ள மக்கள் 63% பேர் இதற்கு ஆதரவு தெரிவித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

இந்த திருத்த சட்டத்தின் மூலம் ஒரே பாலின ஜோடிகள் திருமணம் செய்து கொள்ளலாம் என்றும் அவர்கள் குழந்தையையும் தத்தெடுத்து வளர்க்கலாம். அதிலும் குறிப்பாக திருமணமான லெஸ்பியன் ஜோடிகளும் விந்து தானம் மூலம் குழந்தைகளை பெற்றுக்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலும் இந்த சட்டமானது வெளிநாட்டு வாழ் துணைவர்களுக்கு குடியுரிமை பெறுவதை எளிமையாக்கும் என்று கூறப்பட்டுள்ளது.